

**ஓம்சக்தி**

**ஆதிபராசக்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

**பதினொன்றாம் வகுப்பு**

**நெடுவினா விடைகள்**

**1.தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ. முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப் படுகிறது?**

- புலம்பெயர்வது ஒன்றும் புதிதல்ல, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம் பெயர்ந்தபடியே இருக்கிறான்.
- தலைவன் பொருள் தேடி தலைவியைப் பிரிந்து செல்லும் "பொருள் வயின் பிரிவு" பற்றி சங் இலக்கியம் பேசுகிறது.
- நற்றிணையில் 153 வது பாடலும் கொடுங்கோல் ஆட்சிக்கு பயந்து மனிதர்கள் வேறு இடம் சென்றார்கள் என்பது குறிப்பிடப்படகிறது.
- கனடாவில் புலம்பெயர் தமிழர்கள்- 1983க்கு பிறகுதான் கனடாவிற்கு குடிபெயர்ந்தார்கள்.
- புது நாட்டுக்கு வந்தவுடன் அவர்கள் செய்தது புது வாழ்க்கையைப் பதிவு செய்ததுதான்.
- நியூசிலாந்திலிருந்து அலாஸ்கா வரை பத்து லட்சம் புலம்பெயர் தமிழர்களும் கனடாவில் மூன்று லட்சம் தமிழர்களும் வாழ்கிறார்கள்.
- கனடாவில் ஒரு சாலைக்கு "வன்னி வீதி" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- தமிழர்களுக்க சொந்தமான வீதியை யாராலும் சிதைக்க முடியாது.

**ஆறாம் திணை ___ பனியும் பனிசார்ந்த நிலமும்:**

- ஆறுமணிக் குருவிக்குப் பறப்பதற்கு எல்லையே கிடையாது. இமயமலைக்குப் பறந்துபோய் மீண்டும்திரும்பும்.
- ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களும் அகதிகளாகச் செல்வதற்கு எல்லையே கிடையாது.
- அவர்கள் செல்வது பனிப்பிரதேசங்கள் என்பதால், அவர்களின் உலகத்தை ஆசிரியர், பனியும் பனிசார்ந்த இடமும் ஆறாம் திணை என்று கூறுகிறார்.

**2.நன்னூல் பொதுப்பாயிரம், சிறப்பு பாயிரம் வழியாக அறிலாகும் செய்திகளைத் தொகுத்துரைக்க:**

பாயிரம் பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என இரண்டு வகைப்படும்.

**பொதுப்பாயிரம்:**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ நூலின் இயல்பு
- ❖ ஆசிரியர் இயல்பு
- ❖ கற்பிக்கும் முறை
- ❖ மாணவர் இஇயல்பு
- ❖ கற்கும் முறை

என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப்பாயிரம் எனப்படும்.

**சிறப்புப்பாயிரம்:**

- ❖ நூலாசிரியர் பெயர்
- ❖ நூல் பின்பற்றிய வழி
- ❖ நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
- ❖ நூலின் பெயர்
- ❖ தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு
- ❖ நூலில் குறிப்பிடப்படும் கருத்து
- ❖ நூலைக் கேட்போர்(மாணவர்)
- ❖ நுலைக் கற்பதால் பெறுகின்ற பயன்
- ❖ ஆகிய எட்டு செய்திகளையும் செம்மையாக தெரிவிப்பது சிறப்புப்பாயிரத்தின் இலக்கணம் ஆகும்.
- ❖ நூல் இயற்றப்பட்ட காலம்,
- ❖ அரங்கேற்றப்பட்ட அவைக்களம்,
- ❖ இயற்றப்பட்டதற்கான காரணம் ஆகிய மூன்றையும் சேர்த்து ஒரு சிலர் கூறுவர்.

**3."சுற்றுச் சூழலை வளப்படுத்துவது இயற்கை வேளாண்மையே" என்னும் தலைப்பில் மேடைப்பேச்சிற்கான உரையை உருவாக்குக.**

- ❖ காவிரி தென்பெண்ணை பாலாறு ___ தமிழ்
  கண்டதோர் வையை பொருனை நதி
  மேவிய ஆறு பலவோட திருமேனி செழித்த தமிழ்நாடு
  என நம் நாட்டின் வளத்தை பல கவிஞர்களும் அழகுப்பட பாடியுள்ளார்கள்.
- ❖ இத்தகைய இயற்கை வளத்தோடு திகழ்ந்த, நம்மில் விவசாயம் என்ற பெயரில் மண்ணை தாய் மண்ணை நஞ்சால் சாகடிக்கிறார்கள்.
- ❖ சாகுபடி, சாகுபடி என்று கூறி, உணவால் மக்களை சிறுக சிறுக சாகடிக்கிறார்கள்.
- ❖ தாய் மண்ணைப்போற்றும் ஒவ்வொருவரும், தாய் மண்ணை காக்க வேண்டும்.
- ❖ "இனிஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம". ஆம் தாய் மண்ணை
- ❖ இனியேனும் காக்க வேண்டும் என்றால். இயற்கை வேளாண்மை முறையை நாட வேணடும்.
- ❖ சாணத்தையும், சாம்பலையும் கொண்டு இயற்கை உரத்தை நாடுவோம். வேம்பையும்,
- ❖ பிரண்டையையும் கொண்டு இயற்கை பூச்சிக் கொல்லியை தயாரிப்போம்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ❖ இனிவரும் தலைமுறையினர் சுத்தமான காற்றையும், கலப்பிடமில்லா உணவையும்,
- ❖ மாசில்லா மகத்தான வாழ்வையும் வாழ இன்றே வழி செய்வோம் வந்தே மாதரம்.

**4.திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.**

**வடகரை நாட்டின் இயற்கை வளம்:**

- ❖ வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் இந்தளம் என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும்
- ❖ வண்டின் இசை கேட்டு வாய்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும்.
- ❖ தாமரைத் தடாகத்தில் மீன்கள் தள்ளிப் பாய்ந்து விளையாடும்.
- ❖ முத்துகளை ஈன்ற வெண்மையான சங்குகள் பரவிக் காணப்படும்
- ❖ மின்னலை யொத்த பெண்கள், பெய் என்றால் மழை பெய்யும்.
- ❖ உள்ளங்கை ஏந்தி இரந்துண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள்
- ❖ மெய்யாகும்.
- ❖ இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற திருமலைச் சேவகன் வீற்றிருக்கின்றார்.

**தென்கரை நாட்டின் இயற்கை வளம்:**

- ❖ தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் மேகக் கூட்டங்கள் தங்கிச்செல்லும்.
- ❖ இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாட மாளிகைகளில் அகில்புகையின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும்.
- ❖ இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.
- ❖ செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது காவல் காப்பார்.
- ❖ இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர்.
- ❖ இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும். அவ்வலைகள் கரைகளில்
- ❖ மோதும் பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும்.
- ❖ இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கம் கொன்றை மலரைச் சூடியதென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.

**5.யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை, குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**

- ❖ மனிதனின் கீழ்மை செயலால் நாள்தோறும் வன உயிரிகள் அழிந்து வருகின்றன.
- ❖ சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சிலர், மது அருந்திவிட்டு அதன் குப்பிகளை மரத்தின் அடியில் போட்டுவிடுகிறார்கள்.
- ❖ யானை போன்ற பெரிய விலங்குகளின் காலில் குத்தி, எளிதில் உள்ளே புகுந்து



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

உயிரைக்கூட கொன்றுவிடும்.

- ❖ மனிதரை அடையாளம் கண்டுகொண்டு 300 கிலோ மீட்டர் வரை பயணிக்கம் யானை, உயிர்போற வலியை கூட தாங்கிக்கொள்ளும் இத்தகைய அருமை மிகுந்த காட்டின் மூலவர் என அழைக்கப்படும் யானை அழிவதற்கு மனிதர்கள் காரணமாகலாமோ? இதை கருத்தில் கொண்டு தடுப்பதற்கான முயற்சிகளை எடுப்பேன்.
- ❖ சுற்றுலா பார்வையாளர்கள் கண்ணில் படும்படி வாசகங்களை எழுதிய அட்டைகளை அமைப்பேன்.
- ❖ வன உயிரி பாதுகாப்பு குறித்து மேடைகளில் பேசுவேன்.முழக்கம் இடுவேன்.

**6.இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்திய தமிழர்களின் வாழ்வில் இருப்பிடங்களின் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க**

**முன்னுரை:**

- ❖ மலை மனித சமூகத்தின் 'ஆதி'' நிலமாகும். அகத்திணையியல், மலை சார்ந்த பகுதியை குறிஞ்சி எனக் குறிப்பிடுகிறது.

**இலக்கிய பதிவு:**

- ❖ சேயோன் மேய மைவரை உலகம் - தொல்காப்பியம்
- ❖ விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ - திருமுருகாற்றுப்படை
- ❖ கடையெழு வள்ளல்கள் மலைகளின் தலைவராக விளங்கினர்

**இயற்கையோடு இயைந்த வாழ்வின் இருப்பிடங்கள்**

- ❖ திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப் புகள், அப்பழங்குடியினர் தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக் கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.
- ❖ ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்
- ❖ தங்கள் குடியிருப்பு பகுதியைவிட உயரமான இடத் திலோடும் சிற்றாறுகள், ஓடைகள் இவற்றிலிருந்து நீர் எடுத்து பருகுகிறார்கள்.
- ❖ நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
- ❖ அவர்களின் வீடுகளில் திண்டுகள்(மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.
- ❖ பழங்குடித்தலைவரின் வீடு, மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது.
- ❖ உயரமான மேடை, திண்ணை, சுற்றுச்சுவர்கள், மேலோடை நீர் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

**மலை, வரை, கோட்டை**

- ❖ வரை, கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- நுனி முதல் அடி வரைமற்றும் அடி முதல் நுனி வரைவரை என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.
- தமிழ் மொழியில் 'கோட்டை" என்னும் சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.

**முடிவுரை:**

- இத்தகைய சீரும் சிறப்பும் மிகுந்த நம் திராவிட வாழ்விடங்களை பற்றி, அறிந்து நம் பண்பாட்டையும்,நாகரிகத்தையும் காப்போமாக.

**7.பாதசாரிகளின் வழிநடைப் பாடலாகக் காவடிச்சிந்து உள்ளது - இக்கூற்றை அண்ணாமலையாரின் பாடல்வழி மதிப்பீடு செய்க.**

**பண்பாட்டின் அடையாளம்:**

- காவடி தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்று
- உலகெங்கும் வாழும் தமிழர்கள் குன்றுதோறும் வீற்றிருக்கும் முருகன் கோவில்களில், காவடி எடுத்து ஆடுவது வழக்கமாக உள்ளது.
- வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர் வழிநடைப் பாடலாகப் பாடும் பாடல்வகை காவடிச்சிந்து.

**கழுகுமலையின் கோபுர கலசம் :**

- கழுகு மலை கோயிலின் கோபுர கலசம் தங்க நிறத்திலானது.
- தேவர்களின் வானத்தை விடவும் உயர்ந்துள்ளது
- பார்ப்பவர்களின் கண்கள் கூசும்படியாகவும், உலகம் முழுவதும் மாசுபடாமலும் காத்துவருகிறது.

**கொடிக்கம்பம்:**

- கோயிலில் நடப்பட்டிருந்த கொடிக்கம்பமானது உயர்ந்து விண்ணிற்கு தாவுவதனைப் போன்று அமைந்திருந்தது.

**நாகத்தின் அச்சம்:**

- இடியின் ஓசை என நினைத்தது பூமியை தாங்கிக் கொண்டிருக்கும் நாகம்.
- ஏனெனில் மெல்லிய இடையை உடைய பெண்கள் தன் சிலம்புகள் ஒலித்திடும் படி கழுகுமலையில் நடனமாடுவார்கள்.அவர்களின் நடனத்திற்கு மத்தளம், தாளங்களை கொண்டுவார்கள்.
- இவ்வோசையினை இடியின் ஓசை என நினைத்து பாம்பு அஞ்சும்.

**மதிலின் பெருமை:**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- வானுலகையும் தொட்டு, அதையும் தாண்டி செல்லும் தன்மையுடைய கழுமலை மதிற்சுவர்கள்
- அம்மதிலில் குளிர்ந்த முகில்கள் ஓய்வெடுத்துச்செல்லும்.
- அவ்வாறு செல்லும் பொழுது, மதிலை உரசும் காரணத்தால்,
- மின்னலையும், இடியையும் உண்டாக்கிச் செல்லும்.

**செவியையும், புவியையும் அடைக்கும் ஓசை:**

- திருப்புகழ் போல சந்த நயத்தோடு சிந்து பாடலை அடியவர்கள் பாடுவார்கள்
- சிலர் பாடுவதைக் கேட்டு, கேட்டு பலரும் ஒரே விதமான இசையில் கூட்டமாக பாடுவார்கள்.
- அது தேவர்களின் காதையும். உலகத்தையும் அடைக்கும்.

**பக்தியின் தன்மை:**

- கருணை வடிவான முருகன் மீது கொண்ட பக்தியால், காவடி சுமந்து வருவார்கள்.
- அனலிடை பட்ட மெழுகுபோல் உள் ளம் உருகி நினைப்பார்கள்
- அவனை நினைப்பது ஒன்றே தமக்கு இன்பம் என கருதுவார்கள்.
- முருகனையே தங்களின் அணிகலன்களாக அணிந்து மகிழ்வார்கள்.

**8.வாடி வாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.**

**முன்னுரை:**

- ஒத்தைக்கு ஒத்தையாகக் கோதாவில் இறங்கும் மிருகத்துக்கும், மனிதனுக்கும் இடையே நடக்கும் விவகாரத்திற்கு முடிவு காணும் இடம் வாடிவாசல். மனிதன் இரத்தம் சிந்தலாம். காளை இதில் ஒரு துளி இரத்தம் கூட சிந்தக் கூடாது.

**தமிழ் பண்பாடும், வாடிவாசலும்:**

- தமிழர்பண்பாட்டின் தன்மையை ஜல்லிக்கட்டு மூலம் உணர்ந்துக் கொள்கிறோம்.
- மாடுகள் அடைக்கப்பட்டுள்ள இடம் தொழுவம்
- பாய்ச்சலுக்கு வரும் மாடுகளை அடைக்கப்பட்டுள்ள இடம் உள் வாடிவாசல்
- மாடுகளை திறக்கும் இடம் - வாசல்

**வெற்றி வீரன் :**

- கை வழுக்காமல் இருக்க தரையில் தேய்த்து சுரசுரப்பாகிக் கொள்வார் கள்
- ஜல்லிக்கட்டு வீரர்கள் மாடு அடக்கும் கலையை நன்கு அறிந்தவர்கள்
- தன் உடலை அதன் உடலோடு ஒட்டிக்கொண்டு வலக்கொம்பைப் பிடிப்பான்.
- அது கால்களை உயரே தூக்கி தாவும்
- பிடியை விட்டுவிடக் கூடாது. இதுபோல் மூன்று முறை மாடு தாவும்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**வெற்றிப்பரிசு**

- ❖ மாட்டை அடக்கிய பின் கொம்புக்கு இடையில் சுற்றப் பட்டிருக்கும் உருமாபட்டையை இழுக்க வேண்டும்
- ❖ மெடல், நகைகள், பட்டுத்துணி எல்லாம் கைக்கு வரும்
- ❖ அதுவே வென்றவனுக்கு கிடைக்கும் வெற்றிப் பரிசு.

**கருத்து**

- ❖ வீரத்திற்கு மிருகம் என்றும் மனிதன் என்றும் வேறுபாடு கிடையாது. வீரம் என்ற கருத்தை வாடிவாசல் உணர்த்துகிறது.

**9.கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.**

- ❖ உயர்ந்தாரின் உலக நடைமுறையோடு ஒத்துப் போகிறவனே உயிர் வாழ்பவன். மற்றவன் செத்தவர்களுள் ஒருவனாகவே மதிக்கப்படுவான்.
- ❖ பெருந்தகையாளனிடம் உள்ள செல்வம் தன் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.
- ❖ ஒருவர் முயன்று ஈட்டிய செல்வம் எல்லாம் தகுதியுடையவர்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் செல்வம் ஒப்புரவு செய்யும் ஒருவனிடம் சென்று சேருமானால், அச்செல்வம் பழுத்துப் பயன்படும் மரம் ஊருக்கு நடுவே பழுத்து விளங்கினால் ஊரார் அனைவருக்கும் பயன்படுவது போல எல்லோர்க்கும் பயன்படும்.
- ❖ பிறருக்கு உதவி செய்வதால் ஒருவனுக்கு பொருட்கேடு முதலியன ஏற்படுமானால் அக்கேடு ஒருவன் தன்னை விற்றாவது கொள்ளத்தக்கதாகும்.

**10.அடக்கமுடைமை ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் - இக்கூற்றை முப்பால் வழி விளக்குக.**

- ❖ நேர்மை மாறாது அடக்கமாய் இருப்பவரின் உயர்வு, மலையைவிட பெரியது ஆகும்
- ❖ ஒருவர் எதை காக்காவிட்டாலும், நாவை காக்க வேண்டும். இல்லை என்றால் சொற்குற்றம் ஏற்பட்டு துன்புறுவர்
- ❖ தீயினால் சுட்டபுண் உள்ளே புண் ஆறிவிடும். நாவினால் சுட்ட புண் புறத்தே தெரியாமல் மாறாத வடுவாக நெஞ்சில் இருக்கும்
- ❖ அடக்கம் எனும் குணம் அவரை தேவர் உலகத்தில் சேர்க்கும்.
- ❖ ஒருவன் கோபத்தை அடக்கி, கற்க வேண்டியதை கற்று, அறிவுடையவனாய் அடங்கி வாழ்தல் வேண்டும்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**11.பௌத்தக்கல்வி, சமணக்கல்வி, மரபுவழிக்கல்வி முறைகளால் தமிழகக்கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க.**

**முன்னுரை:**

- கல்வியின் முதன்மையான நோக்கம் , தனிமனிதனைச் சமுதாயத்திற்கு ஏற்றவனாக மாற்றுவது, நாட்டின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்ப்பதாகும்

**சமணக் கல்வி முறை**

**சமண சமயத்தின் தலையாய அறங்கள்**

- கல்வி, மருந்து, உணவு, அடைக்கலம்

**பள்ளி எனும் சொல்லின் விளக்கம்**

- பள்ளி ___ என்னும் சொல் படுக்கை எனும் பொருள்
- பள்ளி எனும் சொல் சமண, பௌளத்தசமயங்களின் கொடையாகும்.

**படுக்கை எனக்குறிப்பிடும் கல்வெட்டுகள்**

- திருச்சி மலைக்கோட்டையிலும்
- கழுகுமலை கல்வெட்டிலும்

**சமண பெண் ஆசிரியர்.**

- பட்டினிக்குரத்தி என்பவள் விளாம்பாக்கத்தில் சமணப்பள்ளியை நிறுவியவர்.
- வந்தவாசி, வேடல் எனும் ஊரில், சமணப்பள்ளியில் பெண் ஆசிரியர் 500 மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார்.

**பௌத்தக் கல்வி முறை**

- தமிழ்கள் இன்று பரவலாக ஏற்றுக் கொண்டிருக்கும் பட்டிமண்டபம் என்பது சமயக் கருத்துகள் விவாதிக்கும் இடமென்று மணிமேகலையில் சுட்டப்படுகின்றது.
- ‘ஒட்டிய சமயத்து உறுபொருள்வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்'' என்பதாகும்
- காஞ்சிபுரத்துக்கு வந்த சீனத்து புத்தமதத்துறவி யுவாங்சுவாங், அங்கிருந்த பௌத்தப் பல்கலைக்கழகத்தில் தங்கிச் சிறப்புரை ஆற்றினார் என்ற செய்தி வரலாற்று மூலம் அறிகிறோம்.

**மரபுவழிக் கல்வி முறைகள்:**

**குருகுலக் கல்வி முறை**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- இம்முறையில் மாணவர்கள் ஆசிரியர்களை அனுகி அவருடன் தங்கி, அவருக்கு தேவையான பணிவிடைகளைச் செய்து கற்றார்கள்.
- செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், எளிமையாக வாழ்தல் என்பது அடிப்படை தத்துவமாகும்.

**திண்ணைப் பள்ளி:**

- திண்ணைப் பள்ளியை தெற்றிப் பள்ளிகள் என்றும் அழைத்தனர். ஆசிரியர்களை 'கணக்காயர்'' என்றனர்.
- பாடத்திட்டம், பள்ளி நேரம், பயிற்றுவிக்கும் முறை ஆகியன ஆசிரியரின் விருப்பப்படியே அமைந்திருந்தது.

**உயர்நிலைக் கல்விமுறை**

- தனிநிலையில் புலவர்களிடத்துக் கற்கும் உயர்நிலைக் கல்வி முறை என்ற வகைமைக்கு சான்று.
- திருவாவடுதுறை ஆதீனமடத்தில் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் உ.வே.சா பாடம் பயின்றார்.

**முடிவுரை**

- பல்வேறு பரிமாணங்களைக் கண்ட கல்வி அமைப்புமுறை இன்று அறிவியல் தொழில்நுட்பத்தின் உதவியால் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

**12.பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?**

**இதழாசிரியர்**

- இதழியல் துறைக்குப் பாரதி வந்து, அசாதாரணமானவற்றை நிகழ்த்திக் காட்டினார்.
- சுதேசமித்திரன்,சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி ஆகிய பல இதழ்களில் ஆசிரியராகவும் துணை ஆசிரியராகவும் பங்காற்றியவர்.

**படைப்பு வெளியீட்டு இதழ்கள்**

- சர்வஜன மித்திரன், ஞானபாநு, காமன்வீல், கலைமகள், தேசபக்தன், கதாரத்னாகரம் போன்ற இதழ்களிலும் பாரதிவெளியிட்டுள்ளார்.

**ஆங்கிலேயருக்கு வெறுப்பூட்ட புனை பெயர்:**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- சாவித்திரி, சி.சு.பாரதி, வேதாந்தி, நித்திய தீரர், உத்தம தேசாபிமானி, ஷெல்லிதாசன், காளிதாசன், காசி, சரஸ்வதி, பிஞ்சுக்காளிதாசன், செல்லம்மா, கிருஷ்ணன்

**கருத்துப் படம்:**

- இதழில் முதன் முதலாக கருத்துப்படம் அறிமுகப்படுத்தியவர் பாரதியார்

**மாற்றம் :**

- இதழ்களில், நாள், ஆண்டு, மாதம் குறிப்பிட்டவர்

**தமிழில் தலைப்பு**

- இதழில் தலைப்பிடலை 'மகுடமிடல்'' என்றார்.

**சக்கரவர்த்தினியில் குறள் வெண்பா**

- பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது சக்கரவர்த்தினி இதழில் குறள் வெண்பா எழுதினார்.
- "பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மையுற ஓங்கும் உலகு" என்று பாடினார்

**சிவப்பு - இந்தியா**

- இந்தியா இதழை 'சிவப்பு'' வண்ணத்தில் வெளியிட்டார். சிவப்பு என்பது புரட்சி, விடுதலை என்பதைக் குறிக்கிறது.

**பாரதியின் தடம் பற்றி நடந்தவர்கள்**

- பி.பி.சுப்பையா, ஹரிஹரர், என்.நாகசாமி, வ.ராமசாமி, பரலி.சு.நெல்லையப்பர், கனகலிங்கம் போன்றோர்
- எந்த நெருக்கடி தருணத்திலும் பாரதி தம் இதழியல் பணியைக் கைவிடவில்லை.

**13.தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக.**

**ஓர் புதையல்**

- தனி மனிதரின் அன்றாட வாழ்வு நிகழ்வாக இல்லாமல், தாம் வாழ்ந்த காலத்தின் தமிழ்ச் சமுதாயத்தைப் படம் பிடித்துக்காட்டும் நாகரிகப் புதையலாக விளங்குமாறு ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பை எழுதியுள்ளார். இவர் நாட்குறிப்பில் அவர்காலப் புதுவை, தமிழகம், தென்னிந்திய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

**வரலாற்று நிகழ்வுகள்**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமம்
- பிரெஞ்சுக் கப்பல் தளபதி லெபூர் தொனே சென்னையைக் கைப்பற்றிய விவரம்
- தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றப் பிரெஞ்சு அரசு நடத்திய போர்
- இராபர்ட் கிளைவ் படை எடுப்பு எனப் பல வரலாற்றுச் செய்திகளை நேரில் கண்டு உரைப்பதுபோல் எழுதி வைத்துள்ளார்.

**வருணனை**

- இங்கிலாந்து பிரான்சு போர்க் காலத்தில், புதுசேரி கப்பல் வாணிகம் தடைப்பட்டது.
- பொருளாதாரத்தட்டுப்பாடு ஏற்பட்டது. மக்கள் பெருந்துன்பம் அனுபவித்தனர்.
- லெபூர் தொனேவின் ஒன்பது கப்பல்கள் வந்தபோது மக்கள் மகிழ்ததைக் கூறும் போது, "கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும், நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்ததுபோலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும், தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷப்பட்டார்கள்.
- அதைக் காகிததத்தில் எழுத முடியாது எனப் பதிவு செய்துள்ளார்
- இதுவே இவருடைய வருணனைத் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**தண்டம் பற்றிய குறிப்பு**

- பட்டணத்திற்குள்ளேயும், உப்பங்கழியிலும், வீதியிலும் காலைக்கடன் கழிப்பவர்
- ஆறு பணம் தண்டம் கட்ட வேண்டும்.
- காலைக்கடன் கழிப்பவரை கண்டுப்பிடித்துக்கொடுப்பவருக்கு 2 பணம் கொடுக்கப்படும் என ஆளுநர் துய்மா அறிவித்திருந்தார்

**தண்டனைகள்**

- மரண தண்டனை, காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் போன்ற தண்டனைகள்வழங்கப்பட்டிருந்தனர்.

**நாணய அச்சடிப் பு விவரம்**

- புதுச்சேரியில் நாணயம் அச்சிடும் உரிமையை நிஜாமிடமிருந்து பிரெஞ்சு வணிகக் கழகம் பெற்றது.
- இதற்கான ஆணையை 10.09.1736 அன்று கனகராயர் பல்லக்கில் வைத்து ஊருக்குள் கொண்டு வந்தார்.

**வராகன் வகைகள்**

- புதுச்சேரிப் பிறை வராகன், சென்னைப்பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப் பேட்டை வராகன், ஆரணி வராகன். முதலியன



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**சிறப்பு:**

- இன்னும் எத்தனையோ தகவல்கள் நமக்கு கிடைத்துள்ள பெருமை இவரையேச் சாரும். 12 தொகுதிகளாக வெளிவந்துள்ள இவரின் நாட்குறிப்பு நாகரிகப் புதையலாக அவர் பயன்படுத்தி இருந்தாலும், நமக்கெல்லாம் வரலாற்றின் புதையலாக விளங்குகிறது.

**14.மதீனா நகரம் ஒரு வளமான நகரம் என உமறுப் புலவர் வருணிக்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**மாளிகை தோற்றம்:**

- 'மதீனா நகரில் இடைவெளி இல்லாமல் நெருங்கி இருந்த மாளிகைகளின் மேல் மாடங்கள் மேருமலையை போல் உயர்ந்திருந்தன.
- அங்காடித் தெருக்களில் பெருங்கடல் ஒலிபோல் மக்கள் ஆரவாரம் செய்தனர்.

**வள்ளல்கள் நிறைந்தமை:**

- மதினா நகரில் வாரி வழங்கும் வள்ளன்மை கொண்டோர் நிறைந்திருந்ததால் கலைஞர்களும்,
- மறையவர்களும் தாம் எண்ணிய பொருள் வளத்தைக் கொண்டிருந்தனர் என்பதாம்.

**வீதியின் அழகு:**

- நெருக்கமாகக் கட்டப் பட்ட தோரணங்களாலும் கொடிகளாலும் மதிகா நகரின் வீதிகள் ஒழுங்குடன் காணப்பட்டன.
- வீதிகளில் புதிய மலர்கள் சிந்திக் கிடந்தன. விருந்தினர் உபசரிக்கப்பட்டதால் வீடுகள் திருமண வீடுகள்போல் பொலிந்தன.

**வளமை:**

- குற்றம் குறை இல்லாத அரசன் ஆட்சி நடத்துவது பொல என்பது உவமையின் பொருள். மதீனா நகருக்கு இது உவமையாகக் கூறப்பட்டுள்ளது.
- மதீனா நகரில் பகை, வறுமை, நோய் முதலானவை இல்லை.
- அவை ஓடி மறைந்த நிலையில் குறைவில்லாத மானுட அறம், அந்நகரில் செங்கோலாட்சி புரிந்தது.
- அதனால் மதீனா நகரம், சிறந்த அரசைப்போல் பொலிவுடன் இருந்தது என உமறுப்புலவர் கூறுகிறார்.
- தானம், ஒழுக்கம், தவம், ஈகை, மானம் பூத்திருந்தது
- வெற்றியைத் தருகின்ற ஊக்கம் காய்த் திருந்தது
- தீன் எனும் செல்வம் பழுத்திருந்தது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**15.கல்லும் கதை சொல்லும் — ___ என்னும் தொடர் தஞ்சை பெரிய கோயிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.**

**முன்னுரை:**

- தமிழகத்தில் பழங்காலத்திலேயே சிற்பம், கட்டடம், ஆடல், பாடல் முதலிய கலைகள் சிறப்புற்றிருந்தன. ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தஞ்சைப் பெரிய கோவிலின் கலை நுட்பத்தை நம் வியந்து கூற இயலாது.

**கேரளாந்தகன் வாயில் :**

- பெரியகோவிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988 ஆம் ஆண்டு சேரநாட்டை வென்றதற்கு அடையாளமாக இக்கோயில் வாயிலுக்கு இப்பெயரினை சூட்டி மகிழ்ந்தான்.

**தட்சிண மேரு:**

- தஞ்சைப் பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோயில்களிலே மிகப்பெரியதாகும்.
- இராசராசனால் ஆறு ஆண்டுகள் முயன்று கட்டியது ஆகும் தான் கட்டிய இக்கோயிலை தட்சிணமேரு என்று அழைத்தார்.
- இக்கோவிலின் விமானம் 216 அடி ஆகும் இதில் உள்ள கருவறை விமானம் 13 அடியாகும்.

**பயன்பாட்டின் இருப்பிடம்:**

- கோயில் பொதுமக்கள் ஒன்று கூடும் இடமாக இருந்தது. அதனால்தான் செய்திகளை கல்வெட்டில் பொறித்தனர்.
- தானியகிடங்குகள், கருவறைகள் மருத்துவ மனைகளாக, படைவீரர்கள் தங்குமிடமாகவும் கட்டப்பட்டதே பெரிய கோயிலின் சிறப்பாகும்.

**இந்திய கலைப்பாணி:**

- இந்தியக் கட்டக் கலைப்பாணியை நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்றாகக் கூறுவர். அதில் தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைபாணியாகும்.

**கல்லால் கவிதை:**

- சிகரத்தில் உள்ள பிரமந்திரக் கல் ஒற்றைக்கல் அன்று. பதின்மூன்று தளங்களை உடைய கருவறை விமானத்தின்மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டன.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**சிறப்பு:**

- ❖ கற்களே கிடைக்காத காவிரிச் சமவெளிப் பகுதியில் இவ்வளவு உயரத்தில் ஒரு கற்கோவில்.
- ❖ தஞ்சையின் பெருமை இந்தக் கோவில்.

**முடிவுரை :**

- ❖ கல் கூறும் கதையில் உலக புகழ் பெற்ற இக்கோயிலை வடிவமைத்த தச்சர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருப்பது. அம்மன்னனின் உயர்ந்த மாண்பு இங்கே புலப்படுகிறது.

**16.சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.**

**இசைத்தமிழ் இருவர்**

- ❖ குருதியை சூடேற்றுவது இசையாகும். அந்த இசையால் தமிழர் பெருமையை உலகிற்கு பறைசாற்றியவர்கள் இருவர்.
- ❖ ஒருவர் இசைஞானி இளையராஜா, இன்னொருவர் இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமான் ஆவார்

**சிம்பொனி தமிழர்: இசைஞானி இளையராஜா**

- ❖ ஆசியா கண்டத்திலேயே யாராலும் சிம்பொனியை இசைக்க முடியாது என்ற வசையைப் போக்கி, சிம்பொனியை இயற்றியவர் இளையராஜா அவர்கள்.
- ❖ ஆசியாவில் சிம்பொனியை முதலில் வடிவமைத்தவர் இளையராஜா
- ❖ சிம்பொனி இசைப் பணியை எழுதக் குறைந்தது ஆறு மாதமாகும். ஆனால் இசைஞானியோ அதை 13 நாட்களில் எழுதிமுடித்தார்.

**மாஸ்ட்ரோ:**

- ❖ தேனி மாவட்டம், பண்ணைப்புரத்தைச் சார்ந்தவர் இவர்.
- ❖ தன் முதல் படம் அன்னக்கிளியில் அறிமுகமாகி 70 மற்றும் 80களில் மிகச்சிறந்த உச்சத்தை அடைந்தார்.
- ❖ இன்றைக்கும் இனிக்கும் என்றும் மாறாத பசுமை அவர்தம் பாடல்களாகும்.
- ❖ இசையுலகின் புதிய முயற்சியில் வெளியானவை "எப்படிப் பெயரிடுவேன், காற்றைவிட வேறெதுவுமில்லை" உலகோரால் பெரிதும் போற்றப்பட்ட இசை வடிவமாகும்.

**புதியமுயற்சி :**

- ❖ ஆரட்டோரியா இசை வடிவத்தில் மாணிக்க வாசகரின் திருவாசகம். இசையமைத்துக்கொடுத்துள்ளார்.
- ❖ ஒரே நாளில் 100 வது நாள் எனும் திரைப்படத்தை இசையமைத்த பெருமைக்குரியவர்.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

❖ தேவாரத்திற்கும்,மகாத்மா எழுதிய ஒரே பாடலான நம்ரதா கே சாகர் என்ற பாடலுக்கும் இசையமைத்தவர். நம் இசைஞானி இளையராஜாவாகும்.

**ஆஸ்கர் தமிழர்: ஏ.ஆர். ரகுமான்**

❖ ஆஸ்கார் தமிழர் எனப்போற்றப்படும் இசைப்புயல் ஏ.ஆர். ரகுமான் அவர்கள் முதல் படத்திலேயே மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்தவர்.

**ஆஸ்கர் விருது**

❖ அமெரிக்காவில கோடாக் அரங்கமே அதிசயத்தது 2009 ல் இரு ஆஸ்காரையும் வென்ற முதல் தமிழன் ஏ.ஆர். ஆவார்.

**ஏர்,ஆர். ரகுமானின் வாழ்க்கை**

❖ தந்தை பெயர் ஆர்.கே.சேகர். மலையாள இசையமைப்பாளராக இருந்தவர். அவருடைய நான்கு வயதில் தந்தையை இழந்த ஏ.ஆர். இசைப்பயிற்சியை இரவெல்லாம் கற்றுக்கொண்டு.

❖ பகலில் பள்ளிக் செல்பவர். வறுமையால் மேலும் படிப்பைத் தொடரமுடியாமல், 11ஆம் வகுப்போடு பள்ளிப்படிப்பை முடித்துக்கொண்டவர்.

❖ ஏர். ஆர் ரகுமான் தனது 4 வயதில் ஹார்மோனியம் இசைக்க கற்றுக்கொண்டார்.

**இசையமைத்த முதல் திரைப்படம்**

❖ ஏ.ஆர். ரகுமான் இசைத்த முதல் திரைப்படமான "ரோஜா" அவருக்கு தேசிய விருதினைப் பெற்றுத்தந்தது.

❖ துள்ளல் ஓசை கொண்டாட்ட மனநிலை உருவாக்கும். அத்தகைய ஓசையை தம் பாடலில்களில் மிகுதியாக இசைத்துக்காட்டியவர் இவர்.

❖ திரையிசையில் சூ/பி இசையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர் "கோல்டன் குளோப்" விருது ஸ்லம்டாக் மில்லியனர் என்ற திரைப்படத்தை இயக்கியதர்காகப் பெற்றவர்.

**முடிவுரை:**

❖ இசை உலகில் இருக்கும்வரை இருவர் புகழும் உலகம் முழுவதும் நிலைத்திருக்கும்என்பதில் எந்த மாற்றமுமில்லை. இத்தமிழரால் நாட்டிற்கு கிடைத்த புகழினை எண்ணி நாம் பெருமையடைவோம்.

**17.சுந்தர ராமசாமியின் —காற்றில் கலந்த பேரோசை என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக.**

**முன்னுரை:**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ஜீவா அவர்கள் தொடக்க காலத்தில் காந்தியவாதி, சுயமரியாதை இயக்க போராளி,
- பொது உடைமை இயக்கத் தலைவர் என பல பரிணாமத்தில் செயல்பட்டார்.
- சிறந்த பேச்சாளர்.காற்றில் கலந்த பேரோசை எனும் தலைப்பு அவருக்கு முற்றிலும் பொருந்தும்.

**மேடையில் வாழ்ந்த மனிதர்:**

- அவர் இறந்துவிட்டார் எனும் செய்தி கேட்ட அத்தனை பேரும். மேடையிலேவா? பேசிக்கொண்டிருக்கும் போதா? எனக் கேள்வி கேட்டனர். இதற்கு அவர் தம் மேடைப்பேச்சால் மக்களுக்கு தொண்டாற்றினார் என்பது புலப்படும்

**வாண வேடிக்கைப் போல்:**

- வாண வேடிக்கைக்காரண் 'வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக்கொள்வார்.
- மேடைமீது ஏறி அதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும். பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும்.
- குடைகுடையாய் இறங்கி வரும். மாலை மலையாய் இறங்கிவரும்.
- உவமை ஜீவானந்தத்திற்கு பொருந்தியுள்ளது.

**பேச்சு வரம்:**

- பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.
- அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.
- அவருடைய பாணி இரவல் பாணி அல்ல. கற்று அறிந்ததும் அல்ல.
- நம் நாட்டு மக்களின் தரத்தையும், அனுபவ அறிவையும், பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதன், விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும்
- கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது.
- பேச்சு பயனைத் தரவேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

**முடிவுரை:**

- இவ்வாறாக பேச்சாற்றலால் மக்களை விழிப்படையச் செய்த ஜீவா . இருந்தபோதும் காற்றில் கலந்தது ஓசை. இறந்த போது மூச்சோடு பேச்சும் காற்றில் கலந்துவிட்டன.

**18.பாரதிதாசன் ஒரு ''புரட்சிக்கவி'' என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.**

**முன்னுரை:**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

❖ வடமொழி பில்கணீயத்தை தழுவி இயற்றப்பட்டது, பாரதிதாசனின் 'புரட்சி கவி'' ஆகும். அரசன் என்பவன் குடிகளுக்காகவே என்பதை பல கவிஞர்கள் உணர்த்தினாலும் , பாரதிதாசன் புரட்சி கவியில் ஆணித்தரமாக சொல்லிய கருத்தை பின்வருமாறு காண்போம்.

**உழைப்பவனே உயர்ந்தவன்:**

❖ ஓடிவருகின்ற ஆற்றுநீரைத் தடுத்து குளம் குட்டை ஏரிகளை அமைத்ததும்.
❖ அவற்றில் இருந்து நீர் கொண்டு செல்ல வாய்க்காலை வெட்டியதும்
❖ தரிசு நிலத்தை வரப்பெடுத்து உழுது அந்நீரைக் கொண்டு விளைவித்ததும்
❖ மக்கள் கூடி வாழச் சிற்றூர்களை உண்டாக்கியதும் உழைப்பாளிகளின் தோள் வலிமையால் விளைந்தனவாகும்
❖ இந்த நாட்டில் உயர்ந்தவர்கள் நீங்களே. உங்கள் உழைப்பில்லை என்றால் இவ்வுலகமே இல்லை என புரட்சி வரிகளை பாடல் வரிகளில் உயர்த்தியுள்ளார்.

**எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்:**

❖ அரசனின் தேவைக்குத்தான் நாடு என்றால் இந்நாடு அழிவதே மேல். நாடு அனைவருக்கும் பொதுவுடைமாக இருக்க வேண்டும்.

**மொழிப்பற்று:**

❖ தமிழ் மொழிக்குப் பழிவந்தால் ஏற்றுக்கொள்ளக்கூடாது.
❖ குற்றம் இல்லாத உயர்தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று உதாரன் பொதுமக்களிடம் கூறுகிறான்.
❖ இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் மொழிப்பற்று அவசியம் என்பதை வரிகளால் புரட்சி செய்தவர் பாரதிதாசன்.

**முடிவுரை:**

❖ சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இதுவே மக்களாட்சியின் அடிப் படை கூறுகளாகும். இதை உணர்ந்து மக்களாட்சியை போற்றுவோம் எனும் நோக் கில் இமைந்துள்ள, பாரதிதாசனின் 'புரட்சி கவி" ஒரு புரட்சியே ஆகும்.

**19.சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

❖ இளைஞர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுவது வீடா? நாடா? எனும் இலக்கிய பட்டி மன்றம் நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. நடுவராக மாணவர் இளங்கோ அழகாக இப்பட்டிமன்றத்தை வழி நடத்திச் செல்கிறார்.

**வீடே என வாதிடும் இருவர் :**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

**எழில் :**

- பிறக்கின்ற குழந்தைக்கு தாயின் முகம் தான் முதல் பாடப்புத்தகம்.உலகத்தை தாய் குழந்தைக்கு அறிமுகப்படுத்துகிறாள். கற்றல் வீட்டிலிருந்து தான் தொடங்குகிறது.

**எலிசபெத் :**

- வீடு என்பது சிறி கூடு அன்று. நம் பண்பாட்டையும், மரபையும் கட்டிக்காக்கும் கருவூலம்.அன்பின் தலைவாசல். உணவு விளைவது,காய்கறி விளைவது எங்கிருந்து கற்றோம். அம்மா, அப்பா, பாட்டி, தாத்தாவிடமிருந்து தானே கற்றோம்.

**நாடே என வாதிடும் இருவர்:**

**அப்துல்லா:** வீடு சிறிய கூடு முரண்பாடுகள் நிறைந்தது. வீட்டைவிட்டு வெளியேறிய பின் பாரதி கவிஞன் ஆனான்.பாரதிக்கு புதிய திசையை கொடுத்தது உலகம்.வீடு என்பது உறவுக்குள் சிக்க வைப்பது. நாடு என்பது சிந்தனைக்குள் உருவாக்குவது.

**அமுதா:** ஆண்களுக்கு வேண்டுமானால் அது அறிவின் உறைவிடம். பெண்களுக்கு இல்லை. 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?" என்று தானே சொன்னது. பள்ளிக் கூடம் அல்லவா இதை தகர்த்து எறிந்தது. பெண்கள் இன்று விஞ்ஞானியாக, விமான ஓட்டியாக, கல்வியாளராக, கருத்தாளராக.ஏன் நாடாளும் அமைச்சராக இருப்பது வீடால் அல்ல. நாடால்தான்.

**முடிவுரை:**

- பாசத்திற்கும், ஒழுக்கத்திற்கும். அன்பிற்கும், அழகாய் உண்பதற்கும் அரவணைப்பிற்கும் வீடே உறுதுணையாக இருக்கலாம்.
- ஆனால் ஏற்றத்தாழ்வில்லாத, ஆண்பெண் பேதமில்லாத சாதி, சமயம் பாரத, நாட்டின் வளர்ச்சி , இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவி புரிவது நாடே என
- அழகாக தீர்ப்பினைக் கூறி, இப்பட்டிமன்றம் நிறைவுறுகிறது.

20.சிதறிய கடிதங்கள் உணர்த்தும் கருத்துகளைச் சிதறாது விளக்குக.

**முன்னுரை:**

- செய்தியை உரியவருக்கு எழுதி அனுப்புவது கடிதமாகும். தாகூரின் கடிதமோ, கற்பனையும், நகைச்சுவையும், ஆழ்ந்த சிந்தனையையும் உள்ளடக்கியது ஆகும்.

**ஆற்றில் மிதந்த பறவை:**

- பத்மா ஆற்றில் வெள்ளம் கரைப்புரண்டதால் கரையில் இருந்த மரத்தின் மண் அரிக்கப்பட்டு மரம் வேரோடு சாய்ந்தது. அம்மரத்தில் இருந்த பறவை நீரில் விழுந்து மிதந்து வந்தது.

**நாட்டுப்புறமும் பட்டணமும்:**

- நாட்டுப்புறங்களில் எல்லாவற்றையும் விழுங்கவல்ல இயற்கையே சிறந்தது.



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- நகரத்தில் மனிதன் தன் சுகதுக்கங்களுக்கு முன் பிற உயிர்களின் சுகதுக்கங்களைப் பற்றி எண்ணுவதேக் கிடையாது.

**ஐரோப்பாவும் பாரத நாடும் :**

- ஐரோப்பாவில் மனிதனுக்குத்தான் முக்கியமான இடம்.
- மற்ற பிராணிகளைச் சாதாரணமான உயிர்களென்றே நினைத்து விடுகிறார்கள்.
- பாரத நாட்டில் எல்லா உயிர்களிடத்தும் கருணை காட்டுவதை உயரியக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

**மலரிடம் அலட்சிய மனப்பான்மை:**

- மலரானது பூத்துக்குலுவதை கண்டு கொள்ளாமல் மனிதன் சென்றாலும் தன் இன் மணத்தால் அவனை அழைத்து பார்க்க வைத்திடும் தன்மை மலருக்கு உண்டு. ஆனால் அலட்சிய தன்மையோ மனிதனுக்கு உண்டு.

**தேசப்பற்று:**

- பரீட்சைக்காகவே சரித்திரப்பாடத்தைப் படிக்கிறோம் . நம் மக்களிடம் காணப்பெறும் தேசப்பற்று, பற்றுதல் காரணமாக இல்லை. புத்தக மூட்டையால் உருவானது என்கிறார்.
- **முடிவுரை:**
- சிதறிய கடிதங்கள் எனும் கடிதத்தின் வாயிலாக தாகூர் அவர்கள், இயற்கையை அலட்சியப்படுத்துதல் கூடாது என்றும் இயற்கையை நேசிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

**21.நர்த்தகி நடராஜியின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

- மதுரையில் பிறந்து நாட்டியத் திறமையால் உலகம் முழுதும் கோடிக்கணக்கான ரசிகர்களைப்பெற்றவர். திருநங்கைகளுக்கு இருக்கும் தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றமுடியும் என்பதை எடுத்துக்காட்டியவர்.

**நாட்டியத்தின் மீது நாட்டம்:**

- வைஜெயந்தி மாலாவின் நாட்டியத்தின் மீது நாட்டம் கொண்டு, நடனம் கற்க ஆசைப்பட்டார்.
- வைஜெயந்தி மாலாவின் குரு கிட்டப்பாவிடம் நடனம் கற்க சென்றபோது முதலில் மறுப்பு தெரிவித்த கிட்டப்பா, ஒரு வருட போராட்டத்திற்கு பிறகு சேர்த்துக் கொண்டார். நர்த்தகி என பெயர் சூட்டியவரும் இவரே.

**பரதமும் பெண்மையும்:**



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- பெண்மையை வெளிப்படுத்தும் ஊடகமாகப் பரதம் இருந்தது.
- பரதத்தில் பெண்மையை வெளிப்படுத்தும் நொடி, வார்த்தைகளில் சொல்ல முடியாத உணர்வு என்கிறார்.
- என்றென்றும் திருநங்கைகளும் நடனமும் இருந்திருக்கிறது
- தொல்காப்பியத்தில் திருநங்கைகளுக்கான சான்று இருந்திருக்கிறது.
- சிலப்பதிகாரத்தில் 11 வகையான ஆடற் கலைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதிலும் "வேளிர் ஆடல்" முக்கியமானது.
- சங்க இலக்கியம் தொடங்கி நவீன கவிதை வரையிலும் நடனத்தில் முயன்று விழிப்புணர்வை ஏற்படுத்துகிறேன்.

**ஜப்பானில் பாரதம் :**

- ஜப்பானில், தேவாரம், திருவாசகப்பண்ணில், நடனம் ஆடியபோது, அதைப்பற்றி அறியாத ஜப்பானியரும், அபிநயத்தில் கண்கலங்கி கரகோஷம் எழுப்பினர்.

**தமிழ் இலக்கிய ஆய்வு :**

- தமிழ் இலக்கியத்தில் சங்கப்பாடல்கள், திவ்விய பிரபந்தம்,திருப்புகழ் மற்றும் தேவாரத்தை நடனம் மூலம் பரப்புவதோடு ஆய்வு செய்தும் வருகிறார் நர்த்தகி.

**துயரத்தை போக்கும் வாயில்:**

- அகிலனின் தாமரை நெஞ்சம் கதையில் வரும் நாயகி தனக்கு துயரம் வரும் பொழுது, தண்ணீர் குடிப்பாராம். ஆனால் நர்த்தகி துயரம் வரும் பொழுது ஒரு நடனம் ஆடி தன் துயரத்தை மறப்பாராம்.

**விருதுகள்:**

- கலைமாமணி விருது, சங்கீத நாடக அகாதெமி, தொலைக்காட்சியின் ஏ கிரேடு விருது.
- வெளியுறவுத்துறையால் சிறந்த கஞைர், பெரியார் பல்கலைக்கழகம் - முனைவர் போன்ற விருதுகளைப்பெற்றுள்ளார்.

**நெகிழ்ந்த தருணம் :**

- தன் தாயாரால் கைவிடப்பட்டாலும், தன்னிடம் பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் தன்னை அம்மா என அழைக்கும் தருணமே தனக்கு நெகிழும் தருணம் எனக் கூறுகிறார்.

**முடிவுரை:**

- “திருநங்கை” என்ற சொல்லை அறிமுகப்படுத்திய நர்த்தகி நடராஜன் போல்



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

- ஒவ்வொருவரும்வாழ்க்கையைக்கண்டு மிரளாமல், புதிய மாற்றத்தை உருவாக்கக்கற்றுக்கொள்ள வேண்டும்.

Padasalai



Please Send Your Answer Keys to our Email Id: padasalai.net@gmail.com

www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |

| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com